## 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில்

# பேருந்து, ரயில் நிலையங்கள் என 18 முக்கிய இடங்கள் இணைக்கப்படும்

■ சென்னை

சென்னையில் பேருந்து நிலையங்கள், பறக்கும் ரயில், மின்சார ரயில், மெட்ரோ ரயில் நிலையங்கள் என 18 பிரதான இடங்களை இணைக்கும் வகையில் 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

சென்னையில் 2 வழித்தடங்களில் 45 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. மெட்ரோ ரயில் சேவை மூலம் விமான நிலையம், எழும்பூர், சென்ட்ரல், கோயம்பேடு, அண்ணா சாலை, வண்ணாரப்பேட்டை போன்ற முக்கிய பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

### 95 ஆயிரம் பேர்

மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து குடியிருப்பு பகுதிகள், முக்கிய அலுவலகங்களை இணைக்கும் வகையில் குறைந்த கட்டணத்தில் ஷேர்ஆட்டோ, கால்டாக்ஸி போன்ற வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இதனால், மெட்ரோரயில்பயணிகள் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து தற்போது தினமும் சராசரியாக 95 ஆயிரம் பேர் பயணம் செய்து வருகின்றனர். பண்டிகை நாட்களில் பயணிகள் எண்ணிக்கை ஒரு லட்சத்தை தாண்டிவிடுகிறது.

இதற்கிடையே, 2-வது கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் பயணிகள் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பது, மக்கள் வந்து செல்வதை எளிதாக்குவது ஆகியவற்றை இலக்காகக் கொண்டு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பேருந்து நிலையங்கள், பறக்கும் ரயில், மின்சார ரயில், மெட்ரோ ரயில்நிலையங்கள் என 18 பிரதான இடங்களை இணைக்கும் வகையில் 2-ம் கட்டத்தில் மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

அதாவது, மாதவரம் - சிறுசேரி சிப்காட் தடத்தில் பெரம்பூர், அயனாவரம், சேத்துப்பட்டு, ராயப்பேட்டை, மயிலாப்பூர், அடையாறு, திருவான்மியூர், சோழிங்கநல்லூர் ஆகியவையும், கலங்கரை விளக்கம் - பூந்தமல்லி தடத்தில் போரூர், வடபழனி, கோடம்பாக்கம், நந்தனம், மயிலாப்பூர் ஆகியவையும், மாதவரம் - சோழிங்கநல்லூர் தடத்தில் வில்லிவாக்கம், அண்ணா நகர், கோயம்பேடு பேருந்து நிலையம், ஆலந்தூர், பரங்கிமலை, சோழிங்கநல்லூர் உள்ளிட்ட இடங்களும் இணைக்கப்படுகின்றன.

இதனால், மக்கள் பேருந்து, மெட்ரோ, மின்சார ரயில் சேவைகளை எளிதாக பெற முடியும். முக்கிய மருத்துவமனைகளுக்கும் எளிதாக செல்ல முடியும் என்று மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.